பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

776

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; விசய, கார்த்திகை; 27—11—53 தளிர்-6

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## மறத்தலும் துறத்தலும்

உதவிகள் செய்வாரை, ஆசிரியர், மிகக் கூர்ந்து நோக்கி இருவகையாகப் பிரிவு செய்கின்றார்.

தூய பெரியோர் ஒரு வகையினர்; அவர், செய்யாமற் செய்யும் உதவியும்; பயன் தூக்காது செய்யும் உதவியும் போல்வன செய்வர்; அவரை மறத்தல் அரிது;

இன்னொரு வகையார், காலத்தில் உதவி செய்பவர்; அதிலும் துன்பக்காலத்தில் கட்டாயமாய்த் துணையிருப்பவர்; கொழு கொம்பு போற் பற்றுக்கோடாயிருந்து வலிமை தருபவர்; ஒருகால், அவர், பயன் கருதிச் செய்பவராகவும் இருக்கலாம்; முன் உதவி செய்த காரணத்தால் இப்போது உதவி செய்பவராகவும் இருக்கலாம். ஆயினும், இடுக்கண் நேரத்தில் உதவி செய்யும் மனப்பான்மை பெரிதும் நேசிக்கத் தகுந்தது. அத்தகையோர் நட்பு, கிடைப்பதற்கு அருமையானது, அதனைப் போற்றிக்கொள்வது கடமை; விட்டுவிடுதல் ஆகாது.

ஆனால், தொடர்பு விடுபட்டாலும் என்றென்றும் மறவாமல் நெஞ்சினுள் இருத்தி வழிபட்டுப் போற்றுதற்குரியோர் தூயோர் என்க.

இச் சிறந்த வேறுபாடு தோன்ற, மாசற்றாரை 'மறவற்க' எனவும் விதந்து விளக்கினார் ஆசிரியர்;

மாசற்றோர், அதாவது சான்றோர், எவரோடும் நட்புக் கொண்டு நெருங்கியிருக்கமாட்டார்கள்; எந்நிலையிலும் பற்றற்றவராகவே இருப்பர்; ஆதலால் அவரது தொடர்பைக் 'கேண்மை' என்றும், ஏனையோர் பற்றுடன் நணுகியிருப்பவராதலின் அவரது தொடர்பை 'நட்பு' என்றும் ஆசிரியர் கூறினார்.

பற்றுடைய ஏனையோரில் எவரைத் துறந்தாலும் துன்பக்காலத்தில் உதவியாயிருப்போரைமட்டும் துறக்கலாது என்று ஆசிரியர் கூறிய நுட்பம் அறிந்து இன்புறுதற் குரியது; அந் நுட்பம், மீண்டும் துன்பத்தில் உதவுவார் என்பதற்கே அன்று; நன்றியறிதலின் பொருட்டாம் என்பது.

மறவற்க மாசற்றார் கேண்மை
துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

மாசற்றார் கேண்மை மறவற்க—மல வழுக்கு நீங்கிய தூயோரது தொடர்பை மறவாதிருக்க; துன்பத்துள் துப்பாயார் நட்பு துறவற்க—துன்பக் காலத்தில் உதவியாயிருப்பவரது நட்பை விடாதிருக்க.

உதவி செய்வாரை இச் செய்யுள் இருவகையாகப் பிரித்தது; மாசற்றார் ஒருவர்; துன்பத்துள் துப்பாயார் ஒருவர்; இவ் விரு திறத்தாரையும் முறையே மறவாமலும் துறவாமலும் இருக்க வேண்டும் என்றது;

துறத்தல் மறத்தலினும் எளிது; துறந்த பின்னும் சிலர் சிலவற்றை மறவாது வருந்துதலுண்டாதலின், மறத்தல் துறத்தலினும் அரிது. எனவே, பொதுவாகக், காலத்தில் உதவுவோரைத் துறவற்க எனவும், தூயோரை அவர் பெருமைகருதி மறவற்க எனவும் விதந்தார்.

மாசு என்றது, பண மாசு முதலியவற்றை; துப்பு—வலிமை; காலத்தில் உதவிசெய்து, வலிமை தந்தவர் என்றபடி.

—:—:—

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| | | |
|---|---|---|
| கிளை 6 | விசய, கார்த்திகை, 27-11-53 வெள்ளி | தளிர் 6 |


## பகைக்கலாமா?

தென்னாடு குறிப்பாகத், தமிழ் நாடு, இப்போது, பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் வேறுபாட்டில் மிகுதியாகக் கருத்திருத்திக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

பார்ப்பனர்கள், "பார்ப்பனீயம்" என்று சொல்லப்படுகிற அவர்கள் போக்கு, வெறுத்துக் கண்டிக்கப்படுகிறது.

அவைகள், பார்ப்பனர்கள் ஆரியர்கள் என்றும், மற்றவர்கள் திராவிடர்கள் என்றும் பிரித்துக் கூறி, அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகளை எடுத்துக் காட்டி வருகின்றன. வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகின்றது என்றும், அதற்குப் பார்ப்பனர்கள் உடந்தையாக இருக்கின்றனர் என்றும் கூறுகின்றனர். அதோடு அவர்கள் அரசியல், சமயம், கல்வி, கலை, இதழ் முதலிய பல துறைகளிலும் செல்வாக்குப் பெற்று மற்றவர்கள் அதில் முன்னேறாதபடி செய்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவைகளெல்லாம் எவ்வளவு தூரம் உண்மை என்று ஆராய்வதன்று இது; ஏன்? ஐயத்தோடு இத்தகைய நிலைகளை நோக்க விபரீதமான முடிவுகளும் வீணான ஆத்திரமும், வெறுப்புணர்ச்சியுமே ஏற்படும் என்பது எண்ணம்.

அதைவிட, இந் நிலைகளை இந் நாட்டில் நூற்றுக்கு மூன்றுபேராக உள்ள பார்ப்பனர்கள் மட்டும் பெறுவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அறிந்து, அக்காரணங்களைப்பற்றி மற்றவர்கள் முன்னேற்றமடைய முயல்வதே நல்லது. வெறும் ஆத்திரமும் வீணான வெறுப்புப் பிரசாரங்களும் முன்னேற்றத் துக்குதவாததோடு, தடையாகவுமிருந்து நாட்டின் அமைதியையும் குலைக்கும்.

பொதுவாகப் பல துறைகளிலும் குறிப்பாக அரசியல் அலுவல்களிலும் பார்ப்பனர்கள் மிகுந்த முன்னேற்றம் அடையக் காரணம், அவர்கள் கல்வியில் வல்லவர்களாக இருப்பதுதான். மற்றவர்களும் அம்மாதிரி கல்வி வளர்ச்சியிற் கருத்திருத்தினால் கட்டாயம் முன்னேற்றம் உண்டாகும்.

சமயத் துறையில் அவர்கள் மட்டும் சிறந்த செல்வாக்குப் பெறக் காரணம் வரலாற்று முறையில் பல இருந்தாலும் அவர்களுடைய சீல[illegible]டம் முழுகுதல், [illegible]மக்கறி உணவு கொள்ளல், தெய்வநம்பிக்கையோடு இருத்தல், பிறர்க்கும் அந் நம்பிக்கையை ஊட்டுதல், நோன்பு முதலியவை காரணம். மற்றவர்களும் இவ்வொழுக்கங்களைக் கைக் கொண்டால் அத் துறையில் முன்னேற்ற மடையலாம்.

கல்வித் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கும் அவர்கள் அதில் செலுத்தும் அக்கறையே காரணம். எவ்வளவு ஏழைப் பார்ப்பனராயிருந்தாலும் அவர்கள் தம் மக்களுக்கு எவ்வாற்றாலேனும் கல்வி கற்பிக்காமல் இருப்பதில்லை.

அப்படியே கலைத்துறை இதழ்த் துறைகளிலும் அவர்களின் ஊக்கமும் இடையறா முயற்சியுமே அவர்களை முன்னேற்றியிருக்கிறது. ஊக்கமும் முயற்சியும் கொண்டால் மற்றவர்களும் இத் துறைகளில் நன்றாக முன்னேற முடியாமற் போகாது.

இவை எல்லாம் உண்மையே ஆயினும், இந் நாட்டுச் சமூக அமைப்பு முறைகள் பார்ப்பனர்களுக்குப் பல காலமாக இவ்வகைகளில் எல்லாம் உயரத்தக்க சூழ்நிலைகளை உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றன; ஆகவே அவைகள் மாறினால் அல்லாமல் மற்றவர்கள் முன்னேற வாயிலில்லை என்பன போலவெல்லாம் சொல்லிப் பயனில்லை.

இந் நாடு ஆங்கிலேயர்கள் ஆட்சிக்குட்பட்ட பின்னரும், விஞ்ஞான வளர்ச்சி, உலக அரசியல், வாணிபச் சூழ்நிலை, உலகின் பல் வேறு நாகரிகங்கள் ஒன்றோடு ஒன்று முயங்கிக் கலந்து கொண்டிருக்கிற போக்கு இவைகளினாலும் பழைய சமூக அமைப்பு முறைகள் இந்நாட்டில் [illegible]வாக மாறிவிட்டன; இருக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# எது விளம்பரம்? எதற்கு விளம்பரம்?

இது விளம்பர காலம்; விளம்பரத்தாலேயே பல செயல்களை நிறைவேற்றிக் கொள்கிற காலம். விளம்பர மில்லாதவர்கள் எவ்வளவு நேர்மையும் நன்மையும் உடையவர்களா யிருந்தாலும் மற்றவர்களோடு போட்டியிட்டு வெற்றிபெற முடியாதபடி இருக்கிற காலம்.

அதனால்தான் "பெர்னாட்ஷா" என்கிற மேலை நாட்டுப் பேரறிஞர் "வெற்றி வேண்டுமேல் விளம்பரப்படுத்துங்கள்! விளம்பரப் படுத்துங்கள்!! விளம்பரப்படுத்துங்கள்!!!" என்று விளம்பிச் சென்றார்.

மேலை நாட்டு வாணிப நாகரிகமும், அச்சு, செய்தித்தாள், திரைப்படம், பல்வகைப் போக்குவரவு வசதிகள் எல்லாமாகச் சேர்ந்து இவ் விளம்பர காலத்தை உருவாக்கியிருக்கின்றன.

நிற்க, இக்காலத்தில் இன்னின்னதற்குத்தான் விளம்பரம் என்று ஒரு வரையில்லை. எதற்கு எடுத்தாலும் விளம்பரந்தான். அதனால் எங்கும் "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே! மெய்போலும்மே!!" மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே! பொய்போலும்மே!!" என்றபடி, அல்லாதவைகளும், ஏன்? பெரும்பாலும் அல்லாதவைகளே தம் விளம்பர வன்மையால் வெற்றி பெற்று, உண்மைகள் விளம்பரமின்மையால் மங்கி வருகின்றன.

விளம்பரம் நல்லதுதான். ஆனால் எது விளம்பரம்? எதற்கு விளம்பரம்? யார் விளம்பரம் செய்வது? என்ற கேள்விகளுக்கு விடை தருவது எளிதன்று. அவரவர்களும் தற்பெருமையாகத் தமக்குத்தாமே எல்லாத்துறையாலும்தோன்றியபடியெல்லாம் விளம்பரம் செய்துகொள்கிறார்கள். அதற்கு ஒரு கட்டுப்பாடோ, அதன் உண்மைகளுக்கு ஒரு பரிசோதனையோ இல்லை. அதனால் பொதுமக்கள் மயங்கி ஏமாறிக்கொண்டிருப்பதோடு, பல துறையிலும் குழப்பமும் அடைகின்றனர்.

செய்தித் தாள்களிலே, சிறிய பெரிய இதழ்களிலே, திரைப்படங்களிலே, சுவரொட்டிகளிலே, போக்கு வரவுக் கருவிகளிலே, அமைப்புகளிலே, உணவு விடுதிகளிலே, மின் விளக்குகளிலே, மேடைகளிலே, மேல் கீழ் ஆடைகளிலே எங்கும் விளம்பரம்; எப்போதும் விளம்பரம்!

இவ் விளம்பரங்கள் அளவுக்கு விஞ்சிவிட்டதனாலே அவைகளை எல்லாம் மக்கள் விரும்பிப் பார்த்துத் தெரிந்துகொள்கிறார்கள் என்று சொல்வதற்கியலவில்லை; புறக்கணிப்பார் பலர். தற்செயலாகக் கண்ணில் பட்டாலும் பார்த்தும் மறந்து விடுபவர் பலர்.

எனவே, வகை வகையான விளம்பரங்களினால் ஏற்படும் பெரும் செலவுகளுக் கேற்றபடி அவை பயன் செய்கின்றன என்று உறுதி சொல்வதற்கில்லை. மாறாக, வாணிபம் என்று எடுத்துக்கொண்டால் அதில் பல பொருள்களின் விலைகள் இவ் விளம்பரச் செலவினாலேயே ஓரளவு உயர்ந்து, அவற்றின் செலவைக் குறைத்து விடுகின்றன எனலாம். அப்படியே பல துறைகளிலும் விளம்பரச் செலவினாலேயே துறைக் கேற்றபடி பண முடைகள் ஏற்பட்டு விடுகின்றன என்றும் சொல்லலாம். திரைப்படத் துறையில் இந்நிலை அடிக்கடி நேர்வதாகத் தெரிந்தோர் கூறுகின்றனர்.

இனி, மேலே கூறியிருப்பவைகளை மனத்துட் கொண்டு, எது விளம்பரம்? எதற்கு விளம்பரம்? என்பது பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம்.

போட்டிகளுக்கிடையே விளம்பரங்களோடு விளம்பரமாக வெளிப்படுத்தப்படுவனவற்றை விளம்பரம் என்று சொல்ல இயலுமா? உண்மையில்லாமல் வெறும் விளம்பரத்தால் பெயர் பரவிவிடுவனவற்றை விளம்பரம் என்று கொண்டு விடலாமா? முன்னவை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு விடுகின்றன; செலவும் மிகுதி. பின்னவை அந்த முன்னுக்கு ஏதோ ஆக்க நிலைகளை உண்டாக்கினாலும் நாளடைவில் அவ்வாக்கம் பட்டுப் போதற்குரிய அடிப்படைமேல் இருப்பதால் பயனில்லாமற் போகின்றது.

எனவே விளம்பரம் என்பது வெறும் செலவை அடிப்படையாகக் கொண்டிருக்காமல் உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சில நேரங்களில் முதலைவிட விளம்பரச் செலவு மிகுதியாகச் செய்-

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

யப்படுகின்றன. கண்டபடி எங்கும் விளம்பரம் என்று செய்யாமல் பல்வேறு துறைகளுக்கும் கூட்டு முறையில் பொது விளம்பர அமைப்புகளைக் கண்டு அவ்வமைப்புகள் வழி விளம்பரங்களைக் கட்டுப்படுத்தி அளவாகச் செய்யவேண்டும். ஒரு துறையைப் பற்றி அறிய விழைவார் அது பற்றிய விளம்பர அமைப்புக்கு எழுதித் தெரிந்துகொள்கிற மாதிரி செய்யவேண்டும்.

அண்மையில் அமெரிக்க நாட்டு அறிஞர் ஒருவர் சென்னைக்கு வந்தபோது "இந்த நாட்டு மொழியில் என்ன என்ன நூல்கள் வெளிவந்திருக்கின்றன. என்று அறிய வழியே காணோம். ஏதாவது ஒரு நூலைப்பற்றி ஒரு பதிப்பகத்தில் கேட்டால், இங்கே இல்லை, அங்கே கேளுங்கள் என்கிறார்கள்; அவர்கள் இன்னொருவரைக் காட்டுகிறார்கள். எவருக்கும் மற்றவரிடம் உள்ளவை என்னென்ன என்று தெரிந்திருக்கவில்லை; எங்கள் நாட்டில் எந்தப் பதிப்பகத்தில் சென்றாலும் துறை துறையாக நாடு முழுவதும் வெளிவரும் நூல்களுக்கெல்லாம் விலைப்பட்டிகள் கிடைக்கும். அவற்றில் நூலின் பெயர், வெளியிட்டோர், எழுதியோர், நூலின் தரம் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கும்" என்றார்.

இவ்வகை விளம்பரமே விளம்பரம் என்று கொள்ளத்தக்கதாய் வீண்செலவை ஒழித்து முழுப் பயன் செய்யக்கூடியதாய் இருக்கிறது. மற்றப்படி எல்லாம் ஓர் ஒழுங்கில்லாமல், நினைத்தது நினைத்தபடி செய்வனவெல்லாம், விளம்பரமாய் விடுமா?

விளம்பரம் பற்றி அவ்வளவாகக் கருத்திருத்தாத சில காலத்துக்கு முன்பு கடைகளுக்குச் சென்றால் வேண்டிய சரக்குகளை நல்லவாய்ப் பார்த்து அல்லது அதன் உண்மைத் தரத்தைச் சொல்லி, "கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது" என்றபடி கொடுத்து, "உங்களுக்கு இவ்விடத்து வாணிபம் மனநிறைவானதாக இருந்தால் இனி இங்கேயே வாடிக்கையாக வாருங்கள், உங்களுக்கு வேண்டியவர்களுக்கும் சொல்லி இங்கேயே வரும்படி செய்யுங்கள்" என்று சொல்வார்கள். சிறுவர் பெரியோர் எவர் போனாலும் ஒரே மாதிரி நடப்பார்கள். இவ்வகைகளில் அவர்கள் வாணிபம் பெரும்பாலும் நிலையானதாய் இழப்பில்லாததாய் நடக்க ஏதுவிருந்தது. இப்போது வணிகரிற் பலர் திடுமென்று பெரும் பணக்காரர்களாய்ப் பின் பேரிழப்பாளர்களாய் விடுகின்றனர் என அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஏன் இந்த நிலை? உண்மையைப் பெரு விளம்பரமாக நம்பாமல் கண்டவற்றிற்கெல்லாம் விளம்பரம் செய்யப்படுவதே காரணம். எவ்வளவோ சட்ட திட்டங்கள் இருந்தாலும் கூடுதல் விலை கொடுத்தாலும் 'நல்ல நெய் நல்ல எண்ணெய் நல்லவாய்க் கிடைப்பது அருமையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிற நிலை, மாறுவது எப்படி?

அல்லாததற்கெல்லாம் விளம்பரம் செய்கிற வாய்ப்பைக் கூடக் கூடியமட்டும் கொடுக்கக்கூடாது. இதற்கு மேற்கூறியபடி விளம்பர அமைப்புகள் ஏற்பட்டு அவைகளின் வழியே விளம்பரம் செய்யப்படுகின்றவற்றின் தரத்தை, உண்மை நிலையைப் பரிசோதித்தே அவ்வமைப்புகள் விளம்பரம் செய்ய இசைதல் வேண்டும் என்றுமெல்லாம் வரையறைகள் செய்யலாம். செய்தால் போலிகள் ஒழியவும், உண்மைகள் வளரவும் வழிவகைகள் உண்டாகும்.

"உண்மையே விளம்பரம்! உண்மைக்கே விளம்பரம்!!" என்கிற முறையில் நாகரிகம் மாறவேண்டும். ஒவ்வொரு துறையிலும் கலை உணர்வோடு கூடிய கட்டுப்பாடான கூட்டு முறை விளம்பரத்திற்கு இடம் செய்யப்பட வேண்டும். அப்போதே காட்டாற்றுப் போக்கில் உள்ள இக்கால விளம்பர நாகரிகம் வீணாகப் போகாமல் வாழ்க்கைப்பயனை விளைக்கும் நாகரிகமாக ஆகும்.


**Phone. 55034. Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**
**சிறந்தது எங்கள் எலிபெண்ட்**
**கிசான் டிரேட்மார்க்**

ELEPHANT KISAN

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# கனவுகள் நனவாகும் இடம்

தமிழ் நாடு இன்று பல நிலைகளில் தன் பண்டைப் பெரு நிலையில் இருந்து இழிந்து சீரழிந்து நிற்கிறது. அதனை உயர்த்தி முன்னேற்றும் பல வழிவகைகளை அண்மைக்காலத்தில் பல தமிழ்ச் சான்றோர்கள் தத்தம் நிலைக்கேற்றபடி வகுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கனவை நனவாக்க அங்கங்கே சிற்சிலர் முயன்றும் வருகிறார்கள்.

அறிய விரும்புகிறவர்கள் தெண்ணீர் வயற்றொண்டை நன்னாட்டிலே, தேசமெல்லாம் புகழ் தேக்கும் கச்சித் திருவூர்க்குப் பக்கத்திலே, ஊற்றுப் பெருக்கால் உள்ளத்துக்குச் சான்றாண்மைக் குணத்தையும் ஊட்டி வளர்க்கும் பாலாற்றங் கரையிலே உள்ள "வாலாஜாபாத்"துக்குப் போகவேண்டும்.

கடவுட் பற்றுள்ளவர்கள், கள்ளங் கவடற்ற குழந்தை உள்ளத்தில் கடவுள் உறைபவர் என்றும், கல்விப் பயனைக் காணத் தக்கவர் என்றும், கலை வடிவானவர் என்றுமெல்லாம் கூறப்படுகிறார், ஆதலின் அங்கே கட்டாயம் கடவுட் காட்சியைக் காணலாம்.

மக்கட்பணியே 'மகேசுவரர் பணி'; ஆதலின் மக்கட் பணி செய்வதைவிட வேறு தெய்வப் பணி வேண்டுவதே இல்லை என்று கூறும் மற்றவர்களும், ஒரு சிறந்த மன்பதைப் பணி நிலையத்தை அங்கே கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடையலாம்.

இனி, தமிழ்நாடு உயர, தமிழ் மொழிப் பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் பழக்க வழக்கங்களும் கொள்ளவேண்டும்; நாட்டைப் பல வகைகளில் நச்சாக்கி வரும் சாதிவேற்றுமைக் கொடுமை நசிக்கப்படவேண்டும்; சமய வெறியை மாற்றும் சமரச சன்மார்க்க நாட்டம் மிகுதியாக வேண்டும்; எழுத்துக் கல்வியோடு தொழிற் கல்வியும், பல்வகைக் கலைக் கல்வியும் பெருக வேண்டும்; ஆட்சி முறைகளை மக்கள் உணர்ந்திருக்கவேண்டும்; உடலோம்பும் முறை, எளிய இயற்கை மருத்துவம் இவைகளை உணர்ந்திருக்கவேண்டும்; என்றெல்லாம் பல படியாகக் கனவு கண்டு கூறியிருக்கிறார்கள் சான்றோர்கள். ஆனால் இவைகளையெல்லாம் செயற்படுத்துவது என்றால் எவ்வளவு கடினம்! எத்துணை முயற்சியும் சலியா உள்ளமும் வேண்டும்!

மேலே கூறிய கனவுகளையெல்லாம் நனவாக்கிக்கொண்டிருக்கும் இடமே வாலாஜாபாத் இந்துமத பாடசாலையும், அதனைச் சார்ந்துள்ள வள்ளலார் மாணவ இல்லமும் ஆகும்.

அப் பள்ளியும் இல்லமும் நடைபெற்றுவரும் புதுமையை விளக்கமாக எழுதவேண்டுமானால் இது பெருகும். எழுதியதைப் படித்துவிட்டால் மட்டும் போதாது; ஒரு முறையேனும் அங்கே சென்று பார்க்கவேண்டும். பார்த்தால்தான் தெரியும் அவ்விடத்து அருமையும் பெருமையும்.

அங்கே நடைபெறும் பல வகைத் தொண்டுகளின் சிறப்பை எண்ணி உணர, பார்த்தபின் நினைந்து நினைந்து மகிழ அவற்றிற்கு அமைந்துள்ள பெயர்களை மட்டுமாவது முதலில் தொகுப்பாக அறிவது நல்லது.

இந்துமத பாடசாலை, வள்ளலார் மாணவர் இல்லம், வாகீச வாசக சாலை, திருஞான சம்பந்தர் நூற் குழுமம், சுந்தரானந்த இசை நிலையம், மாணிக்கம் அச்சகம், மெய்கண்டார் சொற்பயிற்சிக் கழகம், திருவள்ளுவர் தொழிற் சாலை, தேரையர் மருத்துவ நிலையம், வீமன் விளையாட்டு வெற்றிப் படை, சாரணர் கூட்டம், குருளையர் குழு, சேர, சோழ, பாண்டிய பல்லவப் பேரணிகள்,........ முதலிய பல பிரிவிலும் அமைப்பிலும் அங்கே தொண்டுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

வாலாஜாபாத், எதிர்கால தமிழ்ப் பண்பாட்டின் விளைநிலம்; தென்னாட்டின் சாந்தி நிகேதனம்; ஓர் அரிய கலைக் கோயில்; தொழிற் பண்ணை; மன்பதைப் பணி நிலையம்.

அதை அயரா அன்போடு அரிதின் முயன்று நடத்துபவர் "அப்பா" என அனைவரும் அழைக்கத்தக்க அன்பர், செயற்கரிய செய்யும் பெரியார் உயர்திரு வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களாவர். அவர்கட்குத் துணை நிற்கும் அண்ணா உயர்திரு. நா. பா. தணிகை அரசு அவர்களாவர். இவ்விருவருக்கும் நீங்காத ஒரு குறை உண்டு. அதாவது 'தொடர்ந்து தமிழ் மக்கள் அனைவரும், தலைவர்கள் பலரும், கூட்டம் கூட்டமாக வந்து அங்கே நடைபெறும் பணிகளைக் கண்டு ஊக்கமூட்டவில்லையே!; அங்கங்கே அது போல் நடத்த முனையவில்லையே' என்பதுதான்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

மொழித் துறை:

# * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு. கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

## அதிகாரம் 9.

## மனம்

அஃதாவது உலகியலைத் தாவிக் கலையியலிற் சிறப்பதாயும், இடை நின்று இரண்டிடத்தும் இயங்குவதாயும் உள்ள மனத் தியல்பு கூறுதல். மனவியலைக் கூறத் தொடங்குவார் முதலில் மனம் இன்னதென விளக்க வேண்டுமாகலின் இது முதற்கண் நிறுத்தப்பட்டது.

1. மனமின்றேல் மாந்தர்
இனமின்றும் எண்ணும்
குண நலம் யாவும் இல.

'மனம்' என்பதொரு நுண்பொருள் இல்லையானால் 'மனிதர்' என்னும் ஓர் உயிர் வகையும் இல்லை. மனிதரினத்தின் சிறப்பியல்பாக எண்ணப்படுங் குண நன்மைகள் எவையும் இலவாகும். மக்கள் மனமென்னும் அறி கருவிக்குச் சிறப்பினுரியராகலின் 'மனமின்றேல் மாந்தர் இனமின்றும்' எனவும் அக் கருவியின் பயனாகவே குண நலங்கள் அவர்க்குப் பெருக வேண்டுதலின் 'குண நலம் யாவும் இல்' எனவுங் கூறினர். "ஆறறிவதுவே அவற்றொடு மனனே, மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்பது தொல்காப்பியம். விலங்கின் தன்மைக்கு வேறாய் மக்கட் குணம் உயர்வாக மதிக்கப்படுதல் தோன்ற, 'எண்ணுங் குணம்' எனப்பட்டது.

2. ஆவதும் அல்லால்
அழிவதும் தன் மனத்தால்
நோவதேன் நோன்பேன் பிற.

ஒருவற்கு ஒரு செயல் ஆவதும் அன்றி அழிவதும் அவன் மனத்தால். மற்று மனத்தை மாட்சிமை செய்தலின்றி வீணில் வருந்துவதேன்? வேண்டுகை என்?

'மன நலம் மன்னுயிர்க் காக்கம்' என்பவாகலின், 'தன் மனத்தால்' என்றும், காரணம் அறியாது செய்தலின் அதன் பயனின்மை நினைந்து 'என்' என்றுங் கூறினர்.

நோன்பென்றது ஈண்டுத் தேவைகட்குப் பரவுக் கடன் ஆற்றி வேண்டிக்கோடலின் மேற்று;. பிற மற்றென்னும் பொருட்டு. இவை இரண்டு பாட்டானும் மனத்தின் பயன் கூறப்பட்டது.

3. மனமடங்கக் கற்றாரே
கற்றார் மனமடங்கார்
என் கற்றும் என்னோ பயன்?

மனம் ஒரு வழி நின்று மாட்சிமையுறப் பயின்றாரே, கலை தெரிந்தவராவர்; அவ்வாறு மனம் அடங்கப் பெறாதார் எவ்வளவு படித்தும் யாது பயன்?

மனம் அடங்குதலாவது, அஃது அறிவின் வழிநின்று இயங்குதல்; அதனாற் புலன் வழித் தீமை குறைந்து, தூய்தாய்த் தன்கட் சிறப்பறிவும் பண்பும் மிகுதற்குக் களனாய்ப் பயன் படா நிற்கும். அங்ஙனமெய்தா முன் பிறவி மாட்சிமைப்படாமையின் 'என்னோ பயன்' என்றார். 'என்' [illegible] இன்மை குறித்து நின்றது. [illegible] காரம் அசை நிலை. இதனால், மனத்தை ஒரு வழி நிறுத்துதலின் இன்றியமையாமை பெறப்பட்டது.

4. கண்காண நின்றிலது
கட்டுக் கடங்கிலது
கண்டார் களவை எவர்?

கட்புலன் காணும்படி மனம் ஒரு பருப்பொருளாகத் தோற்றவில்லை; ஒரு வரம்புக்கும் அடங்கிற்றில்லை; அதன் கரவுத் தன்மையை யாவர் அளவிட்டுக் கண்டவர்?

கண்ணுக்குத் தெரியாததொரு பொருளாயிருந்துங் கட்டுக்கடங்காச் செயல்கள் புரிதலின் களவுடைத் தென்றும், களவும் ஆழங் காணவியலாத தென்பார் 'கண்டார் எவர்' என்றுங் கூறினர். மனம் நுண்பொருளாதலின், காண நின்றிலது; அதனால், விரைவு பெரிதுடையதாகலின் கட்டுக் கடங்கிலதென்க.

5. பற்றிய பற்றுண்டும்
பற்று பசி அந்தோ
தன்னைத்தான் உண்ணும்
மனம்.

தான் பற்றிய பற்றுக்களை உண்டும் அவை பசிக்குப் போதா; ஐயோ, அதனால் மனம் தன்னைத்தானே உண்டு அழியும்.

பற்றென்றது புலன்களின் வாயிலாகக் கொள்ளும் நுகர்வுகளை; மனத்துக்குப் பசியென்றது அதன் அவாவினை; உண்டும் பற்றாமையின் தன்னைத் தான் உண்ணும் என்றார்; வேதனையால் ஏங்கியழிதலையே ஈண்டு அவ்வாறு கூறினாராகலின், உண்டு அழியும் எனப்பட்டது. உருபுகள் விகாரத்தாற் றொக்கன.

6. மாய மகளிர்
மயக்கின் மனந்தரூஉம்
நேய மயக்கே மயக்கு.

பொருட்பெண்டிர் தரும் வஞ்ச மயக்கத்தினும் மனம் தரும்

மயக்கமே பெரு மயக்கமாகும்:
'தரூஉ' மென்பதை முன்னுங்
கூட்டுக.

கெடுத்தலில் மகளிரும் மன
மும் தம்முள் ஒப்பாரயினும்
மனம் உடனிருந்தே கெடுத்தலா
லும் மகளிரைப் போல் தன்கட்
கறுப்பு வைத்தலின்றி நேயஞ்
செய்தலாலும் மனத்தானுண்டா
கும் மயக்கத்தை நேய மயக்
கெனவும், அவ்வாறு கூறினரே
னும் அந்நேயம் இயல்பாகவே
தீங்கு பயப்பதாயிருத்தலாலும்
அதனால் அஃது உட்பகையாத
லாலும் அதன் தீமை பெரி
தெனவுங் கூறினர். ஏகாரம்
பிரிநிலை; இம் மூன்றுபாட்டானும்
மனத்தின் இயல்பு கூறினர்.

7. மனத்தடிமை கொள்வார்
மதிவல்லார்; அல்லார்
மனத்திற் கடிமை யவர்.

அறிவு வல்லமை யுடையவர்
மனத்தைத் தமக்கு அடிமையா
கக் கொள்வர். அல்லாதவர்
மனத்திற்குத் தாம் அடிமைய
ராவர்.

மனத்தடிமை, உருபு தொகச்
சாரியை நின்றது. தம் அறி
வின் வழி நிகழுமாறு செய்தல்
அடிமை கொளலாகலின், அவ்
வாறு செய்வாரை மதிவல்லா
ரென்றார். 'அடிமைய' ரென்பது
'அடிமையவ' ரென நின்றது.

8. சூட்டுக்கோல் பற்றியே
சுட்டழித்தும் அஞ்சாதோ
மீட்டும் முளைக்கும் மனம்.

சூடு போடுங் கோலைப் பிடித்
துச் சுட்டுக் கெடுத்தும், அஞ்
சாது போலும்; மனம் மீண்டுங்
கிளர்ந் தெழும்.

'சூட்டுக் கோ' லென்றது அறி
வுரையை. சுடுதல் இடித்
துரைத்தலெனவும், அழித்தல் அவ்
வாற்றால் அதன் வலிமையைக்
கெடுத்தலெனவுங் கொள்ளப்
படும். முளைத்தல் தன் இயல்பி
லேயே மீண்டுங் கிளர்ந்தெழுத
லாகலின் அச் சொல்லாற் கூறி
னர். ஏகாரம் ஈற்றசை. இங்கு
இரண்டானும் மனத்தை
அடக்குதலின் அருமை புலப்
படுத்தினர்.

9. வெறுமனமே தீமை
விளைப்ப விதையாய்ப்
புலம் மூடும் பொல்லாப் புதர்.

மனம் ஒன்றே தீமை விளைத்
தற் குரியதாயிருக்க, அது விதை
யாகப் புலன்களென்னுந் தீய
முட் செடிகளும் அதனை
வளைத்து மூடிப் பாதுகாக்கும்.

வெறுமை தனிமையாகலின்
அது தோன்ற நின்றது. விதை
முளைத்துச் சுற்றுப் புதரைப் பற்
றுக் கோடாகக் கொண்டு
வலிமை பெறுதலின் மூடுதல்
ஈண்டு வளைத்துப் பாதுகாத்தலை
உணர்த்தும்; புலன்களின் சார்பு
கருதி இவ்வாறு கூறினர். ஆக,
ஈறு தொகுத்தல். இதனால்
மனத்திற்குத் துணையாவதொன்
றும் நுவலப்பட்டது.

10. விட்டும் வடு மறையா
வீண் எண்ணம் வீழ்மடலே
விட்டும் விடுமோ வடு.

தீய நினைவுகள் நீங்கியும் பய
னற்ற நினைவுகளாகிய
நினைவின் வடு மறையாது;
அவ்வாறிருக்க, தீய நினைவுகளா
கிய விரும்பும் நினைவுக் கிளைகள்
கிளைத்தும் வடு நீங்குத
லுண்டோ?

வீண் எண்ண வடு வென்க.
வீண் எண்ணமாவது, காரியத்
திற்கேலாத எண்ணம். வீழ்தல்,
மடலென்பதனால் உணர்த்தப்
படும் நினைவைத் தொடர்ந்தது;
இது தொகைப் புறத்து மொழி.
மடலே விட்டும் என்றவிடத்து,
விடுதல் கிளைத்தல். ஓகாரம்
எதிர் மறை. இதனால் மனத்தின்
தொழிலாகிய நினைப்பின்
அழியா அடையாளங் கூறுமுகத்
தான் அதன் கண் விழிப்பா
[illegible]ப்பட்டது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கரும்புதின்னக் கூலியா
வேண்டும்? கரும்பை விளைக்கா
விட்டாலும், விளைந்ததைக் கண்டு,
சுவைத்துப் பார்த்து மகிழலா
மல்லவா? வாரீர், வாரீர், என
வாலாஜாபாத் நாளும் வரவேற்
கிறது. வாய்ப்புள்ளவர்களும்,
வாய்ப்பில்லாதவர்கள் வாய்ப்பை
உண்டாக்கிக் கொண்டும் ஒரு
முறையேனும் வாலாஜாபாத்
துக்குப் போகவேண்டும்.

இறுதியாக அப்பாவுக்கும்
அண்ணாவுக்கும் ஒரே ஒரு
வேண்டுகோள். தமிழ் மொழிப்
பற்றை, தமிழ்ப் பண்பாட்டைச்
சிறுவர்களிடையே விளைத்து
வளர்க்கும் அவர்கள் பல வகை
யில் வசதியும் பொருத்தமும்
இருப்பதால் (வித்துவான் தேர்
வுக்குரிய) தமிழ்ப் புலவர்
வகுப்புகளையும் தம் இல்லத்தின்
சார்பில் அமைத்து நடத்த முற்
படல் வேண்டும்.

வள்ளலார் இல்லத்தை ஒரு
தமிழ்ப் பொழிலாகவும், அங்கே
பயிலும் மாணவர்களை அதன்
நிழலில் விளையாடும் சிறுவர்க
ளாகவும் செய்ய இவ்வேற்பாடு
மேலும் உதவியாக இருக்கும்.
வாலாஜாபாத் பணிகளுக்கு முடி
கவித்தது போன்ற நிலையைத்
தமிழ்ப் புலவர் வகுப்புகள் உண்
டாக்கும். சென்னைப் பகுதியில்
கரந்தைத் தமிழ்க் கல்லூரி
போன்ற நல்ல தனித் தமிழ்க்
கல்லூரி ஒன்று இல்லை என்கிற
குறையையும் அது நீக்கும்.

வாழ்க வா. கி. மா!
வெல்க தணிகையரசு!!
வளர்க வள்ளலார் இல்லம்!!!

—ந. ரா. ஆடலரசு.

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற அல்லது இருக்கக்கூடிய வேறு தடைகளை எல்லாம் எடுத்து, நுனித்து வகுத்துக் காட்டி வெறுப்பை வளர்த்துக் கொண்டிருப்பதை விட இயல்பான நன் முயற்சிகளால் பரந்துபட்ட ஆக்கப் பணிகளால் மேற் கூறிய வகைகளில் முன்னேற முயல்வதே நல்லது.

கட்டுப்பாடான நல்லாக்கப் பணிகளை எந்தச் சூழ்ச்சியும் ஒன்றும் செய்து விட முடியாது.

இனி, எவ்வளவுதான் ஆள் வலிவு மிகுதியாக இருந்தாலும் அறிவு வலிவுக்கு முன் ஆள் வலிவு ஒன்றும் செய்ய இயலாமற்போகும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

பார்ப்பனர் பொதுவாக அறிவு வளமுடையவர்கள். அவர்களைப் பகைத்துக் கொள்வதை விடத் தழுவிச் செல்வதே நல்லது. அவர்களை ஆரியர் என்றும் பிறவாறும் சொல்வதெல்லாம் வரலாற்று முறையில் நிலைநாட்டக் கூடியனபோலத் தோற்றினாலும், இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இங்கே வந்ததாகக் கூறப்படும் ஆரியர்கள் எவ்வளவுபோ யிருக்கமுடியும்? இலட்சக் கணக்கிலிருந்தாலும் இப் பரந்துபட்ட துணைக் கண்டத்தில் இத்துணைக் காலங் கழித்தும் அவர்கள் தூய தனி ஆரியராய் இருக்க முடியுமா? அவர்களுக்குள்ளும் எத்துணையோ பிரிவினர் இருக்கக் காரணம் என்ன? இப் பிரிவினர்களுக்குளெல்லாம் ஓர் ஒற்றுமை இருக்கிறது. என்றால், மற்றவர்களுக்குள் அத்தகைய ஒற்றுமை இல்லாவிட்டாலும் உண்டாவதைத் தடுப்பார் யார்!

கடவுட் கொள்கையும் அதை ஒட்டிய சமய சாத்திரங்களுமே மற்றவர்களிடையிலுள்ள வேற்றுமைகட் கெல்லாம் காரணம் என்றும், அவற்றை உண்டாக்கியவர் ஆரியரே என்றுமெல்லாம் சொல்வதும் உண்மையாக மாட்டா. திராவிடர்கள் கடவுட் கொள்கை யில்லாதவர்கள் என்பதற்குச் சான்று என்ன! உண்மையில் இறந்து போன தம் முன்னோர்களையே தெய்வமாக வழிபட்டு வந்த ஆரியர்கள் திராவிடர்களைப் பார்த்தே கடவுள் நம்பிக்கை பெற்றனர் என்றுதானே ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இவையெல்லாம் எப்படி இருந்தாலும் இந் நாட்டுச் சமயத் தலைவர்கள் எவரும் சாதி வேற்றுமைகட்கு இடம் தந்ததாகத் தெரியவில்லையே. அவர்கள் வாக்குகளை, வரலாறுகளைக் கொண்டே இச் சாதி வேற்றுமைகளைப் போக்கிவிடலாமே!

பார்ப்பனர்களை, அறிவும் திறமையும் உடையவர்களை, காலம் இடம் கருத்தறிந்து போகக் கூடியவர்களை, நிலைமைக்கேற்ப நடந்து தமக்குத் தாமே திருந்தக் கூடியவர்களை, எல்லாத் துறையிலும் முன்னணியிலிருப்பவர்களைப்பகைத்துக் கொண்டு முன்னேற முயல்வதை விட (அது எளிதில் முடியாது. முடிந்தாலும் நன்முறையில், அமைதிவழியில் அமையாது. ஆதலின்) அவர்களைப் பின்பற்றிச் சென்று நயமான முறைகளில் அவர்கள்பால் உள்ள குறைகளை (எவரிடமும் குறைகள் இருப்பது இயல்பு ஆகலின்) சுட்டிக் காட்டிக் காட்டித் திருந்தி, அவர்களின் துணையையும் கொண்டு முன்னேற முயல்வதே நல்லது.

—ஒளி.

## வாழ்வியல் இயக்கம்

குருகுல மதனின்
பெருநலங் கேண்மின்
கொள்கையும் செயலும்
ஒன்றுங் கோட்டின்
நிலவுமெய் யன்பர்
குலவுநற் சூழலாய்,
நெறிகள் பலவிற்
செறிதரு மக்கள்
எல்லாம் ஒருகுலம்
வல்லான் ஒருவனே
என்னுங் கலங்கரை
விளக்கின் மின்னலாய்,
எல்லையில் கட்சிப்
பிணக்குகட் கொல்லையில்
இடந்தந் தழியும்
மக்களை இனவழி
மொழி, கலை, தொழில்,
அருள், பணிஎனும் ஐவகை
மொய்ம்பினிற் சிறந்து
செம்மைநல் வாழ்வில்
நிலைபெற வைக்கும்
தலையளி யுடையதாய்,
நெடுநல் மறவி
மடிதுயில் நான்கும்
உடையராய்ச் சிற்றார்
ஒதுக்கினிற் கிடக்கும்
ஒடுக்கப் பட்ட
உரிமையில் மக்களின்
உயர்வை உன்னி
மயர்வற உழைப்பதாய்,
ஒளிவளர் பள்ளி,
உணவகம், முல்லைக்
கொடியிதழ், படிப்பகம்,
மிடியறு தொழிலகம்,
குலவுகல் லூரி,
கலையரங்(கு), அச்சகம்
முதலிய உறுப்புகள்
பலவுடை எழிலியாய்,
வளங்கெழும் வாழ்வு
வாழ்ந்திடச் செய்யும்
வாழ்வியல் இயக்கமாய்
வளர்மது மன்னே!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)